අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk


මගේ අංකය / எனது இல. / My Ref. } ED/01/10/01/170

ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2018.06.20

சுற்று நிருப இல:- 17/2018

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை முகாமையாளர்கள்/ அதிபர்கள்.

## அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலையொன்றில் இருக்க வேண்டிய கல்விசார் பணியாளர்களை நிர்ணயித்தல்.

1. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் (உதவி பெறும்/ பெறாத) தனியார் முகாமைத்துவத்தின் கீழ் அரசின் பொதுக் கல்விக் கொள்கைகளுக்கேற்ப செயற்படுகின்றன. இப் பாடசாலைகளுக்கு அரசின் மூலம் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு உரிய குறிக்கப்பட்ட ஆசிரியர் ஆளணி எண்ணிக்கை கணிக்கப்பட்டதன் பின் அவ் எண்ணிக்கைக்கு உரிய ஆசிரியர் நியமனங்கள் அங்கீகரிக்கப் படுவதோடு அவர்கள் பாடசாலைப் பங்களிப்பு ஆசிரியர் ஓய்வூதியத் திட்டத்திற்கும் விதவைகள்/ தபுதாரர், அனாதைகள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கும் உரிமை பெறுவர். உதவி பெறும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட நியமனமுடைய ஆசிரியர்களுக்கு அரசின் மூலம் ஆசிரியர் சம்பளத்திற்காக நிதியுதவியும் வழங்கப்படுகின்றது.

2. அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் ஆசிரிய ஆளணி எண்ணிக்கையைக் கணித்தலானது 2018ஆம் ஆண்டு வரையிலும் 1997.04.08ஆம் திகதியைக் கொண்ட 1997/04 சுற்று நிருபத்திற்கேற்பவும் அச்சுற்றுநிருபத் திருத்தமாக வெளியிடப்பட்ட 1998.03.11ஆம் திகதியைக் கொண்ட 1998/09 சுற்று நிருபத்திற்கேற்பவும் செயற்படுத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் ஆசிரியர் ஆளணி எண்ணிக்கையை கணிப்பீடு செய்கையில் இச் சுற்றுநிருப நிபந்தனைகளுக்கு ஏற்ப கல்வியமைச்சின் 2016.01.07ஆம் திகதியைக் கொண்ட 01/2016 சுற்று நிருபத்தினைப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் நிறுவன, நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பில் இதற்கு முன் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளில் ஆசிரியர் ஆளணி எண்ணிக்கை கணிப்பிடுவதற்காக 1997/04 சுற்று நிருபத்தினை பயன்படுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அதற்குப் பதிலாக 1/2016 சுற்று நிருபத்தினை கீழ்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக பயன்படுத்துதல் வேண்டும்.

3. நிபந்தனைகள்

3.1. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் ஆசிரியர் ஆளணி எண்ணிக்கை கணிப்பீட்டினை வருடாந்தம் அங்கீகரித்துக் கொள்ளுதல் வேண்டும். எல்லா வருடங்களிலும் டிசம்பர் 31ம் திகதிக்கு முன் அவ் வருடத்தின் ஜுன் 01ம் திகதியன்று உள்ள வகுப்புகளின் எண்ணிக்கையையும் கற்கும் மாணவர் எண்ணிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு அடுத்த வருடத்திற்கான ஆசிரியர் ஆளணி எண்ணிக்கையினைக் கணக்கீடு செய்து அதனை கல்வி அமைச்சின் மூலம் அங்கீகரித்துக் கொள்ளுதல் வேண்டும். எனவே வருடாந்தம் உரிய வருடத்தின் ஆகஸ்ட் 30ம் திகதியாகும் போது பாடசாலையின் மூலம்


ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 / +94112784825 / education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 / +94112785162 / secretary.education@moe.gov.lk

இத்தகவல்களை வலயக் கல்விக் காரியாலயத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2. இவ் அமைச்சினால் வெளியிடப் பட்டுள்ள இல: 1/2016 சுற்று நிருபத்தின் 07, 08, 09 பிரிவுகளும் அதன் உப பிரிவுகளும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்குப் பொருந்தாது.

3.3. மேலே 3.2ல் குறிப்பிடப் பட்டுள்ள இல: 1/2016 சுற்று நிருபத்திற்கு ஏற்ப உரிய ஆசிரிய ஆளணி எண்ணிக்கை கணக்கிடப் படுகையில் அவ்வெண்ணிக்கை 1997/04 சுற்று நிருபத்திற்கேற்ப கணக்கிடப்பட்ட எண்ணிக்கையை விட குறைவாகவோ அல்லது அதிகமாகவோ காணப்படலாம். 1997/04 சுற்று நிருபத்திற்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கையினுள் நியமிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்றோர் எண்ணிக்கையானது இச் சுற்று நிருபத்தின் மூலம் அங்கீகரிக்கப்படும் ஆசிரியர் ஆளணி எண்ணிக்கையைவிட அதிகமாயிருப்பின் அவ்வாறு மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை இரண்டு வருடங்களினுள் சமப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இம் மாறுநிலைக் காலத்தினுள் ஆசிரியர் சமப்படுத்தல் நடைபெறும் வரை புதிய நியமனங்கள் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

3.4. மேலே 3.3யில் குறிப்பிடப்பட்ட 02 வருட மாறுநிலைக் காலத்தினுள் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை சமனிலைப்படுத்திக் கொள்ள முடியாமல் போனால் ஆசிரியர்களின் நியமனக் கடிதங்களில் குறிப்பிட்டுள்ளபடி மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள் முறைமையான செயன்முறை ஒன்றினை பின்பற்றி சேவையிலிருந்து அகற்றுவதற்கு பாடசாலை முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3.5. வகுப்பொன்றில் இருக்க வேண்டிய மாணவர் எண்ணிக்கை அரசாங்கப் பாடசாலைகளில் சுற்று நிருபங்களுக்கு ஏற்ப இருக்க வேண்டிய மாணவர் எண்ணிக்கைக்கு சமாந்தரமாய் இருத்தல் வேண்டும். எனினும் ஒரு தரத்தில் ஒரு வகுப்பினை மாத்திரம் செயற்படுத்தும் பாடசாலைகளில் வகுப்பொன்றில் இருக்க வேண்டிய மாணவர் எண்ணிக்கை 15யினை விட குறையும் பட்சத்தில் அவ்வெண்ணிக்கையை 2 வருடத்தினுள் விருத்தி செய்து கொள்ள முடியுமென வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தோன்றும் பட்சத்தில் அவரினால் அதற்கான சிபாரிசு ஒன்றினை வழங்க முடியுமாயின் உரிய வருடத்திற்கான ஆசிரியர் பணியாளர் எண்ணிக்கை அங்கீகரிக்கப்படும். அவ்வாறு வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசு கிடைக்காவிடின் மாணவர் எண்ணிக்கை 15யினை விட குறைவாகவுள்ள வகுப்புக்கள் அனைத்தினதும் மாணவர் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு மாணவர்கள் 15 பேருக்கு ஒரு ஆசிரியர் வீதம் பெற்றுக் கொடுக்கப்படும்.

3.6. மேற்குறிப்பிடப்பட்ட 1/2016 சுற்றறிக்கையின் இணைப்பு (1)யின் இலக்கம் 7 "சமயப் பாடங்களுக்காக இருக்க வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை" எனும் தலைப்பின் கீழ் தரப்படுள்ள அட்டவணையில் "04–240 வரை மாணவர்கள் உள்ள பாடசாலைக்காக இன்னுமொரு பாடசாலையுடன் இணைத்து பாடசாலை இரண்டிற்காகவும் ஆசிரியர் ஒருவரை வழங்க முடியும்" எனக் குறிப்பிடப் பட்டுள்ள பிரிவு அரச அங்கீகாரம் பெற்றுள்ள தனியார் பாடசாலைகளுக்குப் பொருந்த மாட்டாது. இதற்காக உரிய பாடசாலையினாலேயே ஆசிரியரொருவரினை நியமித்துக் கொள்ளுதல் வேண்டும்.

3.7. க.பொ.த. உயர் தர வகுப்புகளுக்காக ஆசிரிய ஆளணி எண்ணிக்கை கணக்கிடப் படுகையில் கணக்கெடுப்புச் செய்யும் வருடத்திற்கு முன்னைய வருடத்தின் ஜூன் 01ம் திகதியாகும் போது 12 ஆம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்திருப்பின் அக் கணக்கெடுப்பு வருடத்தில் பரீட்சைக்குத் தோற்றும் வகுப்புகளுக்காக ஆசிரியர்கள் பெற்றுத்தரப்பட மாட்டார்கள்.

3.8 அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளிலும் ஆசிரியர் எண்ணிக்கையினைத் நிர்ணயித்தலானது இதன் பின்னர் வகுப்பு எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப செயற்படுத்தப் படுவதனால் வகுப்பு எண்ணிக்கையினை அதிகரிப்பதாயின் அதற்காக வலயக் கல்விப் பணிப்பாளர். மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைகள் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறான அங்கீகாரமின்றி வகுப்புக்களை ஆரம்பித்து ஆசிரியர் ஆளணி எண்ணிக்கை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படின் அதற்கான அங்கீகாரம் வழங்கப்படமாட்டாது.

3.9. மேற் குறிப்பிடப்பட்ட 1/2016 சுற்று நிருபத்தின் இணைப்பு ii ஆனது தனியார் பாடசாலைகளுக்கு பொருத்தமற்றதாவதோடு அதற்குப் பதிலாக இச் சுற்று நிருபத்தின் இணைப்பு (ii) மற்றும் இணைப்பு (iii)யினைப் பயன்படுத்துதல் வேண்டும்.

3.10. 1/2016 சுற்று நிருபத்தின் இணைப்பு (i) யின் 15வது பிரிவு கீழ் வருமாறு திருத்தப் படுகின்றது. "அனைத்து அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் ஒரு அதிபர் இருத்தல் வேண்டும்."

4. ஒவ்வொரு தனியார் பாடசாலையும் இவ் நிபந்தனைகளுக்கேற்ப 1/2016 சுற்று நிருபத்திற்கமைய தயார் செய்யப்பட்ட ஆசிரியர் ஆளணி எண்ணிக்கைக் கணிப்பீட்டினை முகாமையாளர்/ அதிபர் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளரினால் பரீட்சிக்கப்பட்டதன் பின் தனது சிபாரிசினை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டியதோடு மாகாணக் கல்விப் பணிப்பாளரது சிபாரிசுடன் கல்வியமைச்சின் தனியார் பாடசாலைகள் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

5. இச் சுற்று நிருபத்தின் விதிமுறைகளை செயற்படுத்தும் போது ஏற்படும் சிக்கல்கள் தொடர்பில் இறுதித் தீர்மானத்தினை வழங்கும் அதிகாரம் கல்விச் செயலாளருக்குரியது.

சுனில் ஹெட்டியாராச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :-

01. கணக்காய்வாளர் நாயகம்
02. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.
03. பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.
04. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்.
05. தவிசாளர் - தேசிய கல்வி ஆணைக்குழு.

இணைப்பு இல (ii)

**............... வருடத்திற்காக அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் (உதவி வெறும்/ உதவி பெறாத) கல்விசார் ஆளணியினரை கணக்கெடுத்தல்**

(முன்னய வருடத்தின் ஜுன் 01ஆம் திகதிக்குரிய தரவுப்படி)

**மொழி மூலம் :-** ........................

01. பாடசாலையின் பெயர் :-
02. முகவரி :-
03. மாகாணம் :-
04. வலயம் :-
05. கோட்டம் :-
06. பாடசாலை தொகைமதிப்பீட்டு இல :- | | | | | |
07. மாணவர் எண்ணிக்கையும் வகுப்புகளின் எண்ணிக்கையும் :-

| பிரிவு | மாணவர் எண்ணிக்கை | வகுப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆரம்பப்பிரிவு (01-05) | | |
| இடைநிலைப்பிரிவு (06-11) | | |
| உயர் தரம் (12-13) விஞ்ஞானப்பிரிவு | | |
| உயர் தரம் (12-13) தொழினுட்பவியல் பிரிவு | | |
| உயர் தரம் (12-13) கலை/ வர்த்தகப் பிரிவு | | |
| விஷேட கல்வி | | |
| மொத்தம் | | |

08. இருக்க வேண்டிய ஆசிரியர் எண்ணிக்கையும் இருக்கும் ஆசிரியர் எண்ணிக்கையும்.

| ஆசிரியர் பாடவகை | | | 17/2018 சுற்றுநிருபப்படி இருக்க வேண்டிய ஆசிரியர் எண்ணிக்கை | தற்போது அங்கீகரிக்கப் பட்டுள்ள ஆசிரியர் நியமன எண்ணிக்கை | மேலும் அங்கீகரித்துக் கொள்ளக்கூடிய ஆசிரியர் நியமன எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| ஆரம்பப் பிரிவு (01-05) | 8.1 | ஆரம்பம் பொது | | | |
| | 8.2 | ஆங்கிலம் | | | |
| | 8.3 | இரண்டாம் தேசிய மொழி (தமிழ்/ சிங்களம்) | | | |
| இடைநிலைப் பிரிவு (06-11) | 8.4 | விஞ்ஞானம் | | | |
| | 8.5 | கணிதம் | | | |
| | 8.6 | தாய் மொழி (தமிழ்/ சிங்களம்) | | | |
| | 8.7 | ஆங்கிலம் | | | |
| | 8.8 | வரலாறு | | | |

இணைப்பு இல (ii)

**............... வருடத்திற்காக அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் (உதவி வெறும்/ உதவி பெறாத) கல்விசார் ஆளணியினரை கணக்கெடுத்தல்**

(முன்னய வருடத்தின் ஜுன் 01ஆம் திகதிக்குரிய தரவுப்படி)

**மொழி மூலம்** :- .......................

01. பாடசாலையின் பெயர் :-
02. முகவரி :-
03. மாகாணம் :-
04. வலயம் :-
05. கோட்டம் :-
06. பாடசாலை தொகைமதிப்பீட்டு இல :- | | | | | |
07. மாணவர் எண்ணிக்கையும் வகுப்புகளின் எண்ணிக்கையும் :-

| பிரிவு | மாணவர் எண்ணிக்கை | வகுப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆரம்பப்பிரிவு (01-05) | | |
| இடைநிலைப்பிரிவு (06-11) | | |
| உயர் தரம் (12-13) விஞ்ஞானப்பிரிவு | | |
| உயர் தரம் (12-13) தொழினுட்பவியல் பிரிவு | | |
| உயர் தரம் (12-13) கலை/ வர்த்தகப் பிரிவு | | |
| விஷேட கல்வி | | |
| மொத்தம் | | |

08. இருக்க வேண்டிய ஆசிரியர் எண்ணிக்கையும் இருக்கும் ஆசிரியர் எண்ணிக்கையும்.

| ஆசிரியர் பாடவகை | | | 17/2018 சுற்றுநிருபப்படி இருக்க வேண்டிய ஆசிரியர் எண்ணிக்கை | தற்போது அங்கீகரிக்கப் பட்டுள்ள ஆசிரியர் நியமன எண்ணிக்கை | மேலும் அங்கீகரித்துக் கொள்ளக்கூடிய ஆசிரியர் நியமன எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| ஆரம்பப் பிரிவு (01-05) | 8.1 | ஆரம்பம் பொது | | | |
| | 8.2 | ஆங்கிலம் | | | |
| | 8.3 | இரண்டாம் தேசிய மொழி (தமிழ்/ சிங்களம்) | | | |
| இடைநிலைப் பிரிவு (06-11) | 8.4 | விஞ்ஞானம் | | | |
| | 8.5 | கணிதம் | | | |
| | 8.6 | தாய் மொழி (தமிழ்/ சிங்களம்) | | | |
| | 8.7 | ஆங்கிலம் | | | |
| | 8.8 | வரலாறு | | | |

மேலே குறிப்பிடப்பட்ட மாணவர் எண்ணிக்கையும் வகுப்புகளின் எண்ணிக்கையும் சரியானவை எனவும் அந்த மாணவர் எண்ணிக்கையையும் வகுப்புகளின் எண்ணிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு கல்விச் செயலாளரின் இல. 17/2018 யினைக் கொண்ட சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப ஆசிரிய ஆளணியினர் கணக்கிடப்பட்டுள்ளனர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:- .............

......................................
முகாமையாளர்/அதிபரின் ஒப்பம்
பெயர்:-
பதவி இலச்சணை:-

**வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசு**

............................................................கல்லூரியின் முகாமையாளர்/ அதிபரினால் மேலே தரப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புகளின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் பரீட்சிக்கப்பட்டதன் பின் சரியாகவுள்ளது எனவும் / திருத்தப்பட்டு சரியாக்கப்பட்டுள்ளது எனவும் இருக்க வேண்டிய ஆசிரியர் ஆளணி எண்ணிக்கை சரியாக கணக்கிடப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்தி சிபாரிசு செய்து முன் வைக்கின்றேன்.

திகதி:- .............

....................................
வலயக் கல்விப் பணிப்பாளரின் ஒப்பம்
பெயர்:-
பதவி இலச்சணை:-

**மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசு**

.......................................................வலயக் கல்விப் பணிப்பாளர் மூலம் எனக்கு அனுப்பப்பட்டுள்ள ............................................................... கல்லூரியின் ஆசிரியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கல்விச் செயலாளரின் இல. 17/2018 யினைக் கொண்ட சுற்றுநிருபத்திற்கு ஏற்ப கணக்கிடப்பட்டுள்ளதோடு அவ் ஆசிரியர் ஆளணி எண்ணிக்கை சரியாகவுள்ளது எனவும் இப்பாடசாலைக்குரிய அதிபர் உள்ளிட்ட இருக்க வேண்டிய ஆசிரியர் ஆளணி எண்ணிக்கை ........... எனவும் சிபாரிசு செய்து முன் வைக்கின்றேன்.

திகதி:- ..............

...................................
மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஒப்பம்
பெயர்:-
பதவி இலச்சணை:-

மேலே குறிப்பிடப்பட்ட ஆசிரியர் ஆளணி எண்ணிக்கையை அங்கீகரிக்கிறேன்./ திருத்தம் செய்து அங்கீகரிக்கிறேன்./அங்கீகரிக்கவில்லை.

....................................................................................................................
....................................................................................................................
...................................................................................................

திகதி:- ..............

.................................
கல்விப் பணிப்பாளரின் ஒப்பம்
(தனியார் பாடசாலைகள்
கல்வியமைச்சு)
பெயர்:-
பதவி இலச்சணை:-

**........ வருடத்தின் ஜுன் 01ஆம் திகதியன்று பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையும் ஏனைய தகவல்களும்**

01. வகுப்புகளுக்கு ஏற்ப மாணவர் எண்ணிக்கை

| தரம் | வகுப்பு | மாணவர் தொகை | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | 1A | | | |
| | 1B | | | |
| | 1C | | | |
| | 1D | | | |
| | --- | | | |
| | --- | | | |
| 2 | 2A | | | |
| | 2B | | | |
| | 2C | | | |
| | 2D | | | |
| | --- | | | |
| | --- | | | |

தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை மேற்காட்டப்பட்டவாறு தயார் செய்து அனுப்பவும். இதன் போது உயர் தர வகுப்புகளுக்காக ஒவ்வொரு பாடத்துறைக்கு ஏற்ப வெவ்வேறாக வகுப்பு எண்ணிக்கையினைக் குறிப்படப்பட வேண்டும். மேலும் உயர்தர வகுப்புகளைக் குறிப்பிடுகையில் பரிட்சைக்கு தோற்றும் வருடத்தை அடைப்புக்குள் குறிப்பிடுதல் அவசியமாகும். உ+ம் 12 Bio (2019)

02. சமயங்களுக்கு ஏற்ப மாணவர் எண்ணிக்கை

| சமயம் | 1-11 தரங்களில் கற்கும் மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| பௌத்தம் | |
| இந்து | |
| இஸ்லாம் | |
| கத்தோலிக்கம் | |
| கிருஸ்தவம் | |
| ----------------- | |
| | |
| | |

03. முறைமையான கணணி ஆய்வுகூட எண்ணிக்கை :-

04. தரம் 10 – 11 யில் கற்பிக்கப்படும் குழுப்பாடங்களின் எண்ணிக்கை

குழு 1 -
குழு 2 -
குழு 3 -

05. 1. விசேட கல்வி அலகொன்று உள்ளதா ?

11. அவ்வாராயின் அங்குள்ள மாணவர் எண்ணிக்கை :-

06. முறைமையான நூலகமொன்று உள்ளதா ?